முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1518

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.11.2023,** சனிக்கிழமை

1. அருள்வேலி கொண்ட ஆறுமுகா
ஆற்றலாக என் சக்தியாக வாழும் ஞானதேசிகா
வரம் தந்து ஆறுமுகன் யான் உந்தனுக்கு
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 09 ம் நாள், 25.11.2023, சனிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் உன் பலம் உலகறிய
ஆற்றல்பட ஆறுமுகன் யான் உனை இயக்குகின்றேன்
மாற்றம் கருதி உலகோரை உன் குடில் நோக்கி வரவழைத்து
மாதவ தர்ம பலத்தை யானே ஊட்டுகின்றேன்
3. ஆதலால் அரங்கன் உன் கருணைப் பார்வை அகிலத்தில் பெற்ற
மக்களெல்லாம் பூதலத்தை ஆளுகின்ற புண்ணியவழிக்கு மாற்றுகின்ற
மாற்றுகின்ற மகா சக்தி தனை
மண்ணுலகில் வரமாகப் பெற்று சிறப்பர் என்பேன்
4. என்கவே உன் நாமஜெபம் சொல்லி
எங்கெல்லாம் தர்மம் நடக்கின்றதோ
அங்கெல்லாம் ஆறுமுகன் யான் இறங்கி
ஆக்கமும் அனைத்து சக்தியுமாக அருளுகின்றேன்
5. அருளவே அரங்கன் கிளைகளைக் கொண்டுதான்
அகிலமெங்கும் ஞான சபை உருவாக்கி
மகிழவே மக்களுக்கு அமைதி பாதுகாப்பு
மண்ணுலகில் பசிபிணி அனைத்தும் விரட்டி
6. ஆக்கமுடன் தர்மஞான பலமிக்க
ஆளுமையும் இயற்கை பலம் கூடிய
ஆற்றல்மிக்க வளமும் பலமும் அகிலமெங்கும் பெற
அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்

7. நடத்தவே அரங்கன் வேதம் ஞானமாகும்
நடத்துகின்ற அரங்கன் தர்மம் ஞாலமதில் மிகுந்த பாதுகாப்பாகவும் மாறும்
ஆதலால் அரங்கன் தொடர்புக்கு வர
அகிலத்துக்கு நன்மை சடுதி நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—